செ.வெ.எண்.76 நாள்.09.02.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில் புள்ளி இயல் துறையின் சார்பில் வீட்டுவசதி துவக்க குறியீட்டு எண் தொடர்பான ஒரு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில் புள்ளி இயல் துறையின் சார்பில் வீட்டுவசதி துவக்க குறியீட்டு எண் தொடர்பான ஒரு நாள் பயிற்சி இன்று **(09.02.2018)** நடைபெற்றது. இப்பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

புள்ளியியல் துறையின் மூலம் வீட்டுவசதி மற்றும் கட்டட புள்ளி விவரத் திட்டங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான பயிற்சி இன்று வழங்கப்படுகிறது. வீட்டுவசதி புள்ளி விவரங்களின் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கணிக்க முடியும். மேலும், நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளிலும் வீட்டுவசதி பற்றிய நிலைமையை தெரிந்து கொள்ள முடியும். நாட்டின் நீட்டித்த வளர்ச்சிக்காக அரசு திட்டமிடும் வளர்ச்சித் திட்டங்களுக்கு புள்ளி விவரம் பயன்பெறும். மாநிலத்தின் மொத்த வளர்ச்சியில் வீட்டுவசதி மற்றும் கட்டடத் துறையின் பங்களிப்பை கணிக்க முடியும். கட்டடங்களுக்கான மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான தேவை அளிப்பு குறித்து மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்தப்படும். மேலும், வீட்டுவசதி மற்றும் கட்டடத் துறைக்காக திட்டங்களை செயல்படுத்த தேவையான நிதி மதிப்பீடு செய்யவும் பயன்படுத்தப்படும்.

வீடு மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ள புள்ளி விவரம், எவ்வளவு வீடுகள், கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது என்ற புள்ளி விவரங்களை சரியான முறையில் வழங்க வேண்டும். இதன் மூலம் வீடு மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு பல்வேறு இடையூறுகளை கண்டறிய முடியும். இந்தியாவில் நகரப் பகுதியில் வசிக்கும் மக்கள் தொகை சதவீதத்தில், தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இப்பயிற்சியில், எடுத்துரைக்கப்படும் விவரங்களை சரியாக பின்பற்றி, சரியான புள்ளி விவரங்களை தயார் செய்து, வளர்ச்சிக்கு உதவிட வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், புள்ளியியல் துறை மண்டல இணை இயக்குநர் திரு.சின்னமாரி, துணை இயக்குநர் திரு.மிராசி ரத்னமணி, மண்டல உதவி இயக்குநர் திரு.கோமுதுரைபாண்டியன், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், கட்டட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொருள்யியல், புள்ளியியல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.